


### த.வெ.க. அரசு பால் உற்பத்தியாளர்களுக்கு – லிட்டருக்கு

# ரூபாய் 45 கொடுத்தால்தான் ஆவினுக்கு பால் வரும்!

## சட்டப் பேரவையில் கவனஈர்ப்பில் முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு பேச்சு!

**சென்னை, ஆக. 26 -**

**சட்டப்பேரவையில் ஆவின் பால் குறித்த கவன ஈர்ப்பில் முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு பேசுகையில், பால் உற்பத்தியாளர்களுக்கு ஒரு லிட்டருக்கு 45 ரூபாய் கொடுத்தால் தான் தனியாருக்கு பால் போகாமல் தடுக்க முடியும் என்று குறிப்பிட்டார்.**

சட்டப்பேரவையில் ஆவின் பால் குறித்த கவன ஈர்ப்பில் முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு பேசியதாவது:-

பேரவைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தியாளர்கள் எல்லாம் தனியாருக்கு போய் பால் ஊற்றுகின்ற சூழ்நிலை ஏற்பட்டு இருக்கின்றது. ஆவினுக்கு பால் ஊற்றினால் தான் பயனாளிகள் தமிழ்நாட்டில் யாரெல் லாம் பாலை பயன்படுத்துகிறார்களோ அவர்களுக்கு சவுகரியமாக இருக்கும். குறைந்த விலையில் அவர்கள் பயன்படுத்த முடியும்.



### ஆவினுக்கு பால் கொடுப்பது கேள்விக்குறி!

இன்றைக்கு தனியாரில் பார்த்தோமேயானால் கேரளா அரசு, மில்மா என்பவர்கள் 45.27 ரூபாய்க்கு ஒரு லிட்டர் பால் வாங்குகிறார்கள். அக் ஷனா, ஆரோக்கியா என்பவர்கள் ஏறத்தாழ 42 ரூபாய்க்கு வாங்கு கிறார்கள். இப்படி தனியார் பால் உற்பத்தியாளர்கள் வாங்குகின்ற காரணத்தினால் ஆவினுக்கு பால் கொடுப்பது என்பது ஒரு கேள்விக்குறி யாக ஆகிக் கொண்டிருக்கிறது.

ஒரு வார காலத்திற்கு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் இங்கே பால் விலை ஏற்றும் குறித்து இங்கே குறிப் பிட்டார். அதில் சொசைட்டி மூலமாக ஒரு ரூபாய் அவர்கள் கொடுக்க வேண்டும். அரசாங்கம் 2 ரூபாய் ஆதார விலை தருகிறது. பல சொசைட்டிகளைப் பார்க்கின்ற போது, சொசைட்டிகளை நடத்த முடியாத சூழ்நிலை இருக்கின்றபோது அவர் களால் ஒரு ரூபாய் கொடுக்கின்ற நிலையே இல்லை என்கிற நிலையே ஒரு பக்கம்.

இன்னொன்று இன்றைக்கு பால் உற்பத்தியாளர்கள் பற்றி சொல்ல வேண்டுமேயானால் தீவன விலை, மாடுகளுக்கு வேண்டிய உணவு இவைகளை எல்லாம் பார்க்கின்ற போது விலை அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் கட்டுப்படியாகவில்லை. அவர்களுடைய எதிர்பார்ப்பு என்பது 45 ரூபாய் கொடுத்தால் பரவாயில்லை. எப்படியாவது, அதுதான் கட்டுப்படியாகும் என்ற நிலை இருக்கிறது.

அதனால் தமிழ்நாடு முழுவதும் எனக்குத் தெரிந்து, கிட்டத்தட்ட பார்த்தீர்கள் என்றால் உங்களுக்கு தெரியும் ஒரு பத்துக்கும் மேற்பட்டு இருக்கிற பால் உற்பத்தியாளர் சங் கங்களே அங்கங்கே போராட்டங்கள் என்ற அடிப்படையில் செய்வது மட்டுமல்ல, 24-ஆம் தேதியில் இருந்து நாங்கள் ஆவினுக்கு பாலை ஊற்ற மாட்டோம் என்ற நிலையால் ஆங் காங்கு போராட்டம் நடைபெறு கிறது.

### தாய்மார்கள் போராட்டம்!

தொலைக்காட்சியிலே பார்க்கின்ற போது தாய்மார்கள் எல்லாம் பாலை கொண்டு வந்து கொட்டிவிட்டு தங்கள் அதிருப்தியை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

எனவே அரசு பொறுத்தவரை குறைந்தபட்சம் ரூபாய் 45 ரூபாயி லிருந்து 46 ரூபாய் வரை ஒரு லிட்டருக்கு எதிர்பார்க்கிறார்கள். எனவே இந்த அரசு உடனே ஆவினுக்கு பால் வருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். ஏனென்றால் கடந்த ஜனவரி 25ஆம் தேதியும், இப்போதுள்ள நிலையையும் ஒட்பிட்டுப் பார்த்தால் ஆவினுக்கு பால் ஊற்று வதே குறைந்துவிட்டது. அதற்கு காரணம் அவர்களுக்கு கட்டுப்படியான விலை தரவில்லை என்கிற குற்றச்சாட்டு இருக்கிறது. எனவே கூடுதலாக இந்த அரசாங்கம் பால் உற்பத்தியாளர்களுக்கு 45 ரூபாய் கொடுத்தால்தான் ஆவினுக்கு பால் வரும். தனியாருக்கு பால் போகாமல் நிறுத்த முடியும். எனவே, நான் அரசின் கவனத்திற்கு இதை கொண்டு வருகிறேன்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு பேசினார்.

### 195வது வட்ட த.வெ.க. செயலாளர் மகி- எழில் நகர்

# அரசு குடியிருப்புகளில் வீடுகளை ஆக்கிரமித்து அராஜகம்!

## அதிகாரிகளுக்கு மிரட்டல் – நெருக்கடி!

*சென்னை, ஆக.26-*

*ஒக்கியம் துரைப்பாக்கம், எழில் நகர் (JNNURM) பகுதியில் உள்ள 12-ம் எண் பிளாக் குடியிருப்புகளான எண்-5 மற்றும் 6 ஆகிய வீடுகளை 195-வது வட்ட த.வெ.க. வட்ட செயலாளர் 'மகி' என்பவர் ஆக்கிரமித்து (மேற்படி வீடுகள் யாருக்கும் ஒதுக்கப்படாமல் வாரியம் வசமே உள்ளது) அவற்றை ஒரே வீடாக இணைத்து அதற்கு சட்டவிரோதமாக த.நா.வா.மேம்பாட்டு வாரிய அதிகாரிகளுக்கு உச்சபட்ச நெருக்கடி கொடுத்து வாரியத்தின் பணிகளை செய்யும் ஒப்பந்ததாரர்களையும் மிரட்டி வீட்டில் புத்தம் புதிய டைல்ஸ்களை பதித்து தனக்கென்று சொந்த உபயோகத்திற்கு பயன்படுத்த முயன்று வந்தார். மேலும் METRO PROJECT 195 மற்றும் 196 வார்டுகளில் ஒப்பந்ததாரர்களையும், அதிகாரிகளையும் மிரட்டி பணம் கேட்டு தொல்லை கொடுத்து வருகிறார். எந்த திட்டத்தை செய்தாலும் அதனை அவரின் கவனத்திற்கு கொண்டு வந்து அவரின் ஆலோசனை படி தான் செய்ய வேண்டும் என்று மிரட்டுகிறார்.*

*இவர் மீது கண்ணகிநகர் T15 காவல் நிலையத்தில் சாராய வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் எந்த அச்சமும் இல்லாமல் அதிகாரம் செலுத்தி வருகிறார்.*

*மேலும் எழில் நகர் 18 மற்றும் 8ஆம் நம்பர் பிளாக்குகளில் உள்ள வீடுகளை ஆக்கிரமித்து தனது சொந்த உபயோகத்திற்கு பயன்படுத்தி வருகிறார்.*

